உ

கடவுள் துணை.

கலியுகச்சிந்து.

கடன்பத்திரம்கலிகாலக்கண்ணாடி

இம்மூன்றும் அடங்கியிருக்கின்றன



சிறுமணவூர்

முனிசாமிமுதலியாரவர்களால்

இயற்றப்பட்டு.

சென்னை-இட்டா

பார்த்தசாரதி நாயுடு

அவர்களது

ஸ்ரீபத்மநாபவிலாசஅச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1908

சென்னை ஆசாரப்பன்தெருவு 84-வது நெ.

உ

கணபதி துணை.

கலியுகச்சிந்து.

நாதநாமக்கிரியை-ஆதிதாளம்-பல்லவி.

காலத்தைப்பாராய்—கலிகாலக்கொடுமையின்
கோலத்தைக்கேளாய்

அநுபல்லவி.

காலத்தின்கோலத்தை ஞாலத்தின்மேலோத
பாலொத்தமொழியாளே வேலொத்தவிழியாளே (கா)

சரணங்கள்.

அரிசிப்படிரெண்டு பணமாய்முழிக்குது
ஐயையோயேழைகள் புழுவாய்துடிக்குது
வரியெல்லாந்தலைக்குமேல் வாரண்டாய்திரியுது
வாங்கியகடனோதான் கோட்டுக்கிழுக்குது
புலம்புதேகுடிகள் புரட்டாசைப்பிசிகூட பொளக்குதேவெய்யல்
நாட்டுப்புறங்களெல்லாம் ஓட்டம்பிடிக்குது
நஞ்சைபுஞ்சைகளெல்லாம் பஞ்சாய்பறக்குது
காடுமேடுகளெல்லாங் கட்டுதிட்டமாச்சுது
காக்காய்குருவிகூட பிழைப்பதரிதாய்போச்சு (கால)

மழையோமழையோவென்று மானம்பார்க்கலாச்சி
மாடுஆடுகள்பேச்சி புல்லுக்கலையலாச்சி
தரையும்உலர்ந்துபோச்சி தண்ணீர்பன்னீராச்சி
தங்கத்தைவைத்தாலும் வட்டிகேழ்க்கலாச்சி
முறைகெட்டுபோச்சிதாயார்தமக்கைபோல பெண்தேடலாச்சி
கொண்டமனைவிபேச்சி கூழுக்கலையலாச்சி
கூத்தியார்பாதத்தைக் காத்துயிருக்கலாச்சி
சொந்தப்படிப்பெல்லாம் சூத்துக்குமணையாச்சி
சொல்லுமிங்கிலீஷுக்கு நல்லபிழைப்பாச்சி (கால)

காட்டில்மழையாச்சி கழனியுலர்ந்துபோச்சி
கலப்பைதாத்துக்கோலே யிறப்பிற்சொருகலாச்சி
போட்டவிரைகளெல்லாம் பொரியாய்ப்பறந்துபோச்சி
பிள்ளைக்குட்டிகளெல்லாங் கஞ்சிக்கலையலாச்சி
மண்மாரியாச்சி நாட்டுப்புறங்களெல்லாங் கண்மாரியாச்சி
யிருந்தவிரைகளெல்லாம யேனோவிரைத்தோமென்று
யிரவும்பகலுமாக முறையிட்டிருக்கும்போது
எடுஎடுவாயிதா பிடிபிடிஆளென்று
ஏழெட்டுபேருக வீட்டைவளைத்துக்கொண்டு
ஜப்திகளாச்சி ஆடுமாடுகளெல்லாம் யேலமாய்ப்போச்சி

வீட்டுவரிவந்து   வாசக்கால்தூக்குது
வியாபாரவரிவந்து   சாமானைவளைக்குது
குப்பைவரிவந்து   குடிசையைப்பிடுங்குது
கொளுத்தும்விளக்குவரி   கழுத்தைப்பிடிக்குது
வேடிக்கையாச்சி தட்டுமுட்டுகளெல்லாம் வியாபாரமாச்சி
களிதின்றுபிழைக்கவும்   கேவுறுமுறைக்குது
கம்புசோளங்கள்கூட   வம்புகள்செய்யுது
கூலிக்குபோனாலும்   லஞ்சங்கள்கேழ்க்குது
கொடுத்தாலும்நாலாளுள்   அடித்துத்துறத்துது(கால)

சீமைசெட்டிகளெல்லாம்   சிறிப்பாய்சிறித்துப்போச்சி
சமுசாரிதாசியும்   வேஷம்ஒன்றாய்போச்சி
பெருமையாய்பிழைத்தவர்   பிழைப்புக்கும்பிழுப்பாச்சி
பொய்சாட்சிசொல்வோர்க்கு   கைமேற்காசியாச்சி
கடைகெட்டுப்போச்சி சர்வகுலங்களும் நடைதப்பிப்போச்சி
அந்தணர்குலத்துட   ஆசாரமும்போச்சி
அவரவர்சாஸ்திரம்   பரணைமேற்றாங்குது
பணமென்றால்பிணங்கூட   வாய்கொஞ்சந்திறக்குது
பாசுபண்ணவர்பேச்சி   வேலைக்குதொங்குது(கால)

தாயொப்பிவந்தாலும்   சேயன்புணரலாச்சி
தம்பித்தமயன்பெண்டை   தெம்பாயிழுக்கலாச்சி
நாய்போலவிலைமாதர்   யெங்கும்பெருத்துப்போச்சி
நாயனைப்பியே   கூட்டிப்பிழைக்கலாச்சி
சுனைகெட்டுப்போச்சி—பணமேபெருமையாச்சி   ஜாதிகள்போச்சி
பலத்தவுத்தியோகத்தைப்   பார்க்கமனவியாச்சி
படுத்துயிருக்கும்போதே   அடுத்துப்புணரலாச்சி
கலங்கிவேசையரெல்லாம்   கண்ணீர்சொரியலாச்சி
கட்டினமனைவிசொல்   விட்டுப்பிழைக்கலாச்சி
வழிகெட்டுப்போச்சி—தனக்கப்பன்பிள்ளையுங்கூட வழக்காடலாச்சி

பூமியிற்பிழைப்பற்று   காவியுடுத்தலாச்சி
பூர்ணமாய்கெஞ்சாதம்   அடித்துமயங்கலாச்சி
சாமியென்றவருக்கு   பேர்கள்நிகளமாச்சி
சாம்பலைபூசவுந்   தெரியாதவர்க்குசீச்சி(கால)

கடுகடுத்துப்பெற்றத்   தாயையுதைக்கலாச்சி
கொடுத்தகடனைக்கேட்டால்   கோட்டுக்கிழுக்கலாச்சி
கொஞ்சமேமாந்தாக்கால்   பஞ்சாயடிக்கலாச்சி
அஞ்சாமல்போச்சி பெரியோர்சிறியோரென்றஅளவெல்லாம்போச்சி
அறுத்தமுண்டைகள்பிள்ளை   பெற்றுவளர்க்கலாச்சி
அப்பனேமாந்தாக்கால்   தாயைபுணரலாச்சி
திருட்டுப்பிள்ளைகள்பெற்று   முறித்துயெரியலாச்சி
தெய்வத்தைநினைப்பவர்   லட்சத்தொருவராச்சி(கால)

கட்டிக்கொடுக்குமுன்னே கள்ளக்குட்டிகளாச்சி
கட்டினமூன்றுநாள் பெற்றுமுறிக்கலாச்சி
மட்டிமுண்டைகளாலே மானங்கெட்டுப்போச்சி
மாதாபிதாபேச்சி தலையைக்குனியலாச்சி
அதிகமாய்போச்சி குடிகெட்டமுண்டைகள் அணியணியாச்சி
பெண்டுகள்வியாபாரஞ் செய்துபிழைக்கலாச்சி
புருஷனவெளுக்கக்கட்டி பினத்திரியலாச்சி
சண்டைசாடிகளெல்லாம் பணத்தையிறைக்கலாச்சி
சாமிக்குக்கொடுப்பவர் தரையினில்மருந்தாச்சி(கால)
பஞ்சாங்கபடிப்பெல்லாம் பஞ்சாய்பறந்துபோச்சி
பறைச்சிக்குபணந்தந்து சிறப்பாய்நடக்கலாச்சி
அஞ்சாமற்பறச்சோற்றில் அந்தணர்விழலாச்சி
அவர்கள்மனைவியெல்லாம் அழுதுபுலம்பலாச்சி
குலங்கெட்டுப்போச்சிஅந்தணராலேயே குடிகெட்டுப்போச்சி
துரைக்குப்பிறந்தவன்போல் டொப்பிசட்டைகளாச்சி
ஜோடுஞ்செருப்பும்போச்சி பூட்சுதூக்கலாச்சி
அடுப்புங்கரையிற்கூட யிங்லீஷ்பேசலாச்சி
ஐயமார்குடிக்கவே அடிக்கொருகடையாச்சி(கால)
சீமைதுரைகளெல்லாம் காவியுடுத்தலாச்சி
சாதிதமிழரெல்லாம் சட்டைமாட்டலாச்சி
காலந்தலைகீழாச்சி கருப்புங்குடியாய்போச்சி
கண்டவிடங்களெல்லாம் பைபிலிரைக்கலாச்சி
வேதங்கள்போச்சி கிருஸ்தவர்கூச்சலே வேடிக்கையாச்சி
கோயில்குளங்களெல்லாம் குட்டிசுவராய்போச்சி
குடியரதிகமாச்சு கடைகள்பெருத்துப்போச்சி
கிராமதேவிகளெல்லாங் கடையாய்பறந்துபோச்சி
கண்டவிடத்தில்வாந்தி பேதியதிகமாச்சி(கால)
கலியுகநடத்தைக்கு கடவுளும்சிரிக்குது
காலத்திற்கேத்தாப்போல் மாரிகள்வருகுது
குளிருகாச்சலிற்பாதி கூண்டோடேசாய்க்குது
சந்தியிருந்தபேரை வாந்தியில்மடக்குது
பேதியிற்பாதி—யிப்படிமடிஞ்சியும் துள்ளுதேகூவிஐயோ
இன்றைக்கிருப்பவர் நாளைக்கில்லையென்று
யார்க்குந்தெரியுமிந்த வூர்க்குந்தெரியுமிது
ஏனோகெருவங்கொண்டு வீணாகமடியுது
எண்ணிப்பார்த்தால்தினம் ஆயிரஞ்சாவுது (கால)
பணங்கையில்வருதென்று பொய்சாட்சிசொல்லாதே
பறிதேகியேழைமேற் புலிபோலேதுள்ளாதே
முழுவேஷம்போட்டுநீ மோசங்கள்செய்யாதே
மூச்சுவெளியேபோனால் சீச்சீபிணமாச்சே
கெருவங்கொள்ளாதே—நிலையில்லாதழுதேநீ கெட்டுப்போகாதே

ஊற்றையுடலைநம்பி ஓதிமேபோலேமிகளாதே
ஊரைப்பகைத்துக்கொண்டு வேறுடன்மாளாதே
காற்றைமலைத்துக்கொண்டு கருமங்கள்தேடாதே (கால)

கலியுகச்சிந்து-முற்றிற்று.

கும்மி.

அண்ணனுக்குத்தம்பி துரோகஞ்செய்யுங்காலம், அப்பனை பிள்ளையுதைக்குங்காலம், பண்ணினநன்றி மறக்குங்காலம், பழிபாவத்துக்கஞ்சா கலிகாலம். ௧

புருஷனைப் பெண்டீருதைக்குங்காலம்பெற்றப்-பெண்ணை தகப்பன் புணருங்காலம், கருமநெறியைமறக்குங்காலமிகெட்டதருதலைக்கேற்ற கலிகாலம். ௨

கொண்டபுருஷனைத் திட்டுங்காலம்இவன் கூலிகொடுத்துப்புணருங்காலம்,முண்டைகள்பிள்ளை பெறுங்காலம்-ஐயா-மானமில்லாத கலிகாலம். ௩

கட்டினமாது அலையுங்காலமிவன் காவியுடுத்திதிரியுங்காலம்,புட்டியாய் குடிக்குங்காலமையா புளுகருக்கேற்றகலிகாலம். ௪

ஸ்ரீயேயும்ஸ்ரீயெல்லும் படித்துவிட்டுமவர்பிழைக்கசீவனமில்லாமல், கையேந்திபூரிகள் வாங்கிப்பிழைக்கிறார் கலியுகக்காலமிதுவல்லவோ.

விக்கிரமாதித்த ராஜனையிலுந்தர்மவேதநெறிநளன் காலத்திலும், அக்கிரமமிப்படிகேட்டதில்லைஐயா அந்தணருத்தியோகஞ்செய்ததில்லை

சொந்தபுருஷனைத்திட்டுங்காலமிவள்சொல்லாமற்றாய்வீடுபோகுங்காலம், கணவன்மனவியை யழைக்கவந்தாலவனைக் கண்டபடியாகத் திட்டுங்காலம். ௭

கள்ளத்தனமாய் புணர்ந்தபிள்ளைபெத்துக்கண்டவிடத்திலெறிந்துவிட்டு, நல்லசமுசாரிபோலேயினுக்கியேநாட்டைகெடுக்குங்கலிகாலம்.

புருஷனைப்பெண்சாதி திட்டுங்காலமையா புருஷன்றலையைக்குனியுங்காலம், கணவனைசாட்சியாய்வைத்துக்கொண்டியிவள் கருத்தைப்போலே,நடக்குங்காலம். ௮

சொந்தபெண்சாதிக்குப் பயந்துவிட்டுமவன்சொல்லாமல்றெயிலேறுங்காலம், போனாலும்போகிறானென்றுசொல்லியிவள் பெற்றவளைக்குங்கலிகாலம். ௯

பொய்யானபத்திர மெழுதுங்காலம் - சாட்சி-பூட்டியேகோட்டிலுங் கெலிக்குங்காலம், தெய்வப்பொருளைத்திருடுங்காலமிது தீவினைக்கஞ்சாக்கலிகாலம். ௧௧

அருமையறியா முரட்டுக்காலமிது கர்மிபைபோற்றுந் திருட்டுக்காலம் சிறுமணலூர்முனிசாமிசொல்வாக்கியம் சோதித்துப்பார் கலிகால குணம். கஉ

கும்மிப்பாட்டுகள்-முற்றிற்று.

நொண்டிச்சிந்து.

ஆறுமாதக் கடன்காரர்-அவருக்கு அண்ணனென்று உரைக்கலாம் மாறுபாடிகள் தாறுமாறுகாயலார்கள் ஊரெங்கும் தானுய்வலியவந்து கடன்கொடுத்து,பத்துக்குஅஞ்சிவட்டியாம்அந்தப்பத்திரமெழுத்துக்கூலியதுவேரேயாம், தருமத்தின் காசிவேறேயாம் - இப்படிதந்திர மாயேழைகள்வாயிலடித்க, தட்டுமுட்டுதவலைசொம்பு பெட்டிமுதல் தந்ததெல்லாம் வந்தமட்டும் வலித்துக்கொண்டு வாயிலொருகணக்குரைப்பார்-கணக்கிலே-வாங்கிவெகுநாளைப்போலேஎழிதிடுவார் பணத்தைக்கொடுத்தனுப்புவார் வாங்கினவன்-பாதிவழிபோகுமுன்னே சம்மனெடுப்பார், தந்தின.

இப்படியிவர்களெழுவாம் நாட்டுகளில் யீட்டிக்காரர் கோராமைகேட்கபயமாம், சைதாப்பேட்டை துண்டுகளையும் வைகுண்டசல்லாப் போல்கந்தைகளை வாரிக்கொண்டு வலைப்போல்புடவைகளையும்கவைக்குதவாடாமேஜிதுண்டுதுண்டாய்கிழித்துக்கொண்டு செம்மண்ணும் பகுடர்களும்நல்ல-சேருபோலேகுழைத்துதோய்த்துக்கொண்டு, கஞ்சியிலேபோட்டுபிழிந்து சந்தைகளைகருவாடு போலுணர்த்தி நாட்டுப்புரங் காடுமேடெல்லாம் கும்பலாய் நாலைந்துபேறுக நுழைந்துவிடுவார் நெல்லூருவேஷ்டிகளென்பார் நூலெல்லாம் நேருகசீமைசாயம் போகாதென்பார் மதுரைப்புடவைகளென்பார் இதுமாட்டுத்தோலைபோலிருக்குங் கிழியாதென்பார் கடனுக்குதருவோமென்பார் நித்தியங்காலணுவிழுக்காடு கொடுங்களென்பார் தெரியாமல் கடனெடுத்தால் தெருவுவாசல்படியில்படுத்து காறிமுழிவார் கொடுத்தகடனைக் கேட்பார் அவர்குந்தினயிடத்தைவிட்டு அசையமாட்டார்குநியங்கள் வைப்போமென்பார் ஆடுமாடுசெருண்டிடும்யேவலிதோ செய்குரோமென்பார்.

கடன்பத்திரம்.

உலகமறியாத (வரு)- ஒருவருங்காணுதமீ ஒருநாளுமில்லாத்தேதிஊரில்லாதவூரிலிருக்குந்தலைகாய்ந்ததாண்டவராயமுதலியார்குமாரன் சநியன்பிடித்த சாம்பசதாசிவமுதலியாருக்கு சரிபடாதவூரிலிருக்கும் பித்தம்பிடித்த பேபாண்டிசெட்டியார் குமரான் பேரில்லாதவன்பிரட்டி எழுதிக்கொடுத்த குறைவயில்லாதகடன்பத்திரமாவதென்னவென்றால் இப்பவும் என்னுடைய வீட்டிற்குக் கிழக்கு அவனுடைய வீட்டிற்குமேற்கு அவனுடையவீட்டிற்குவடக்கு இவனுடையவீட்

டிற்குத் தெற்கு இந்தநாற்பாங்கெல்லைக்குட்படநிச்சயித்து சென்னப்பட்டணம் சிலாமணிராசி கும்பினி ரூபா-ருா இந்த ரூபாய்ஐந்நூற்றுக்குமாதம்-க-க்கு-ரூபா-ள-க்கு வட்டி-ரூபா-௧ ஆ ஏறினவட்டியும் முதலும் தாங்கள் வேண்டாதபோது கொடுக்காமற் போகக்கடவேணுகவும் ஒருசமயம் அப்படிக்குக்கொடுக்கும் அட்டிக்குஅப்பியந் தப்பட்டால் தாங்கள் எந்தகோர்ட்டிலாவது போட்டு கோர்ட்டுச் சிலவில்லாமல் அசல்பூஜியமாய்ப்போகக் கடவீராகவும் இப்படிக்கு என்னுடைய மனோராஜியில் சம்மதித்து எழுதிக்கொடுத்த குதுவையில்லாத கடன்பததிரம்.

இதற்குசாட்சி இவனேஅவனே எழுதினவனெவனே கைபெழுத்து

நடுவீதிநாராயணன்

கலிகாலக்கண்ணுடி.

தகப்பனுக்குமகனிழவு பழக்குங்காலம்
தமயனுக்குதம்பிபுத்தி சொல்லுங்காலம்
குருக்களிருந்தாசனத்தி லிருக்குங்காலம்
கொடுத்தகடன்கேட்பவரை வுதைக்குங்காலம்
வலக்கைபிடித்தரசாணி சுற்றிவந்து
மாப்பிள்ளையைமருந்திட்டுக் கொல்லுங்காலம்
கணக்கருக்குஅடிவழக்கு பேசுங்காலம்
கலிகாலமாமிந்த காலந்தானே. க

வாய்வேகமாகரெயில் வோடுங்காலம்
வாய்பேச்சுதத்திவழி பேசுங்காலம்
தாய்பேச்சுபிள்ளைகட்கு விஷமாங்காலம்
தன்மனவிமனதின்போல் நடக்குங்காலம்
நாய்போலவிலைமாதர் பெருத்தகாலம்
நம்பினோமென்றவரைக் கெடுக்குங்காலம்
காதலெனும்மனையாளை வணங்குங்காலம்
கலிகாலமாமிந்த காலந்தானே. உ

முண்டைச்சிகள்சந்துசந்தாய் திரியுங்காலம்
முலைகாட்டிமூசுண்டை பரிக்குங்காலம்
தங்கைதனைதமையன்பெண் டாளுங்காலம்
தமையன்பெண்டைதம்பிசிறை யெடுக்குங்காலம்
பருவப்பெண்திண்ணைமேல் உட்காருங்காலம்
பரிகாசவார்த்தைதனைப் பேசுங்காலம்
கருவழிக்கமருந்திட்டுக் கொல்லுங்காலம்
கலிகாலமாமிந்த காலந்தானே. ந

மாமனையேமருமகளும் புணருங்காலம்
மாமியார்மருமகனை மருவுங்காலம்

பெற்றவளும்பிள்ளைகளைச் சேருங்காலம்
பெண்ணவளுந்தகப்பனையே பிணையுங்காலம்
தன்மனைவிதிலோர்த்தமைபோ லிருக்குங்காலம்
த்டியார்களும்சந்துசந்தாய் திரியுங்காலம்
காமமெனுங்கருங்கடலில் மூழ்குங்காலம்
கலிகாலமாமிந்த காலந்தானே. ௪

சங்கையற்றுத் திண்ணைமேல் உட்காருங்காலம்
சமுசாரியென்றபேர் நீளுங்காலம்
கொங்கைதனைக்காட்டியே அழைக்குங்காலம்
கொழுந்தனுடன் ஆசைவைத்துப் பேசுங்காலம்
பாட்டிகளைப்பேறன்பெண் டாளுங்காலம்
பாலகனைப்பெற்றுதா லாட்டுங்காலம்
களிப்புடனேஉடப்பிறப்பை புணருங்காலம்
கலிகாலமாமிந்த காலந்தானே. ௫

கணவனையேமத்தாலே அடிக்கலாச்சு
களிப்புடனேதாய்வீடு சேரலாச்சு
பெண்ணவளும்தாய்வீடு போகலாச்சு
பெற்றவளுங்கூட்டியே கொடுக்கலாச்சு
களிப்புடனேகூட்டியே பிழைக்கலாச்சு
கலிகாலமாமிந்த காலந்தானே. ௬

அவுசாரிஉலகத்தில் அனேகமாச்சு
அன்னநடைதாசிகட்கு பிழைப்பும்போச்சு
புவிமீதில்கவிவாணர் சிறப்பும்போச்சு
புத்தியில்லாமடையருக்கே காலமாச்சு
பருவப்பெண்பாட்டுகளும் பாடலாச்சு
பருத்தகிழமாப்பிள்ளையை புணரலாச்சு
கற்றவரைக்கல்லாதார் இகழலாச்சு
கலிகாலமாமிந்த காலந்தானே. ௭

பிள்ளைபெற்று ஆற்றோரம் போடலாச்சு
புருஷனடித்தாலவிறையைப் பிடிக்கலாச்சு
முண்டைகளும்புருஷனையே தேடலாச்சு
முகமினிக்கிக்கண்டபடி திரியலாச்சு
அண்டைவீடுமன்னர்கள் கெடுக்கலாச்சு
அடுத்தவரைஅன்றைக்கே கொல்லலாச்சு
கொண்டைக்குமினுக்கெண்ணை பூசலாச்சு
கொழுந்தனுக்கும்பிள்ளைபெற்று வளர்க்கலாச்சு
கன்னியர்கள்கண்டவரை புணரலாச்சு
கலிகாலமாமிந்த காலந்தானே. ௮

கலிகாலக்கண்ணாடி-முற்றிற்று.